## கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

## சட்ட பீடம்

### சட்டமாணிப் பரீட்சை, ஆண்டு II (இணையம் மூலமானது) – 2021

# ஒப்புரவு மற்றும் நம்பிக்கைகள் சட்டம்

(மூன்று மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: **06**

எவையேனும் **<u>மூன்று (03)</u>** வினாக்களுக்கு **<u>மட்டும்</u>** விடையளிக்க.
(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)

---

1. இன்றைய காலத்திலும் கூட, நீதிபதிகள் தமது தீர்ப்புகளில் பல்வேறு ஒப்புரவு முதுரைகளை மேற்கோள் காட்டுகின்றனர். இருப்பினும், இம் மூதுரைகள் அவற்றினுடைய உண்மையான அர்த்தத்தினைக் கருத்திற் கொள்ளாது சாதாரணமாக ஓர் 'மந்திரம்' போன்று பயன்படுத்தப்படுவதனால் இந்த மூதுரைகளைப் புறக்கணிக்குமாறு எதிர்வாதங்கள் முன்வைக்கப்படுகின்றன. நீதிபதிகள் தமது வெளிப்படையான காரணத்தை ஓர் மூதுரையினைப் பதிலீடு செய்வதன் மூலம் மறைக்கலாம் என்பதுடன், சில நேரங்களில் நீதிபதிகள் வெவ்வேறுபட்ட மூதுரைகளுக்கிடையிலான வேறுபாடுகளை மறந்து விடுகின்றனர் போன்றவை பிரதானமான இரு வாதங்களாக உள்ளன.

   நீர் உடன்படுகிறீரா? உமது விடைக்கான காரணங்கள் மற்றும் நியாயத்தினை பொருத்தமான அதிகாரங்களுடன் தருக.

   (100 புள்ளிகள்)

2. நிஷால் என்பவன் குலுக்கல் சீட்டொன்றில் முதலாவது பரிசை வென்றான் என்பதுடன் தரும நம்பிக்கைகளை ஆக்க விரும்புகிறான். பின்வருவனவற்றினால் வலிதான தரும நம்பிக்கை ஒன்று ஆக்கப்படுகின்றதா என்பதை ஆங்கிலச் சட்டத்துடன் ஒப்பிடுவதன் மூலம் ஆராய்க:

   (அ) மோட்ஸிஷம் என அழைக்கப்படும் ஓர் மதத்தின் அடிப்படைவாதக் கருத்துக்களை ஊக்குவிப்பதற்கு மோட்ஷா என அழைக்கப்படும் ஓர் மதப் பாடசாலைக்கு நன்கொடையாக ரூபா ஒரு மில்லியன்.

(ஆ) ஒவ்வொரு வருடமும் எனது பிறந்த நாளன்று என்னுடைய கிராமத்திலுள்ள ஏழை மக்களுக்கு மதிய உணவு வழங்குவதற்கென ரூபா ஒரு மில்லியன்.

(இ) கிராமத்திலுள்ள இளைஞர்களுக்கு கராத்தே வகுப்புக்களை நடாத்துவதற்கு எனது கிராமத்திலுள்ள விளையாட்டுக் கழகத்திற்கு ரூ. 50,000.

(ஈ) வைத்தியசாலைக்கு வருகின்ற பார்வையாளர்களின் நன்மைக்கென கட்டணம் அறவிடப்படாது வாகனம் நிறுத்துவதற்கான வசதிகளை வழங்குவதற்கென மஹரகமவில் அபேக்ஷா வைத்தியசாலைக்கு அண்மையிலுள்ள எனது காணி.

(25x4= 100 புள்ளிகள்)

3. (அ) மற்றும் (ஆ) பகுதிகள் இரண்டிற்கும் விடையளிக்க.

(அ) 'ஓர் தடுக்கின்ற தடையாணையானது (prohibitory injunction) பிரதிவாதி சிலவற்றைச் செய்வதிலிருந்து தடுப்பதற்குக் கட்டளையிடுகின்றது என்பதுடன், அது ஓர் கட்டாயப்படுத்தும் தடையாணையிலும் (mandatory injunction) பார்க்க மிகவும் எளிதில் வழங்கப்படுகின்றது.'

மேற்போந்த கூற்றின் வலிதாந் தன்மையை ஆராய்க. உமது விடையானது பொருத்தமான தீர்ப்புச் சட்டத்தினால் ஆதாரப்படுத்தப்படுதல் வேண்டும்.

(ஆ) நிக்கோலின் என்பவள் அழகு மாதிரிகளில் ஓர் புதுவரவு என்பதுடன் 2020 இல் நடைபெற்ற அழகுராணிப் போட்டியொன்றில் இரண்டாம் இடத்தைப் பெற்றாள். அவள் ஸ்ரார் சனல் எனப் பெயரிடப்பட்ட மிகவும் பிரபலமான தொலைக்காட்சியொன்றுடன் ''அந்த முகமூடி'' எனப் பெயரிடப்பட்ட அதனுடைய அண்மைய தொலைக்காட்சி நாடகத்தில் பிரதான கதாப்பாத்திரத்தில் 2021 இல் நடிப்பதற்கு உடன்படிக்கையொன்றில் ஈடுபட்டாள். ஸ்ரார் சனல் இனுடைய எழுத்து மூலமான சம்மதமின்றி இரண்டு ஆண்டுகளுக்கு வேறெந்தத் தொலைக்காட்சிகளிலும் நடிப்பதில்லை என அவள் உடன்பட்டாள். உடன்படிக்கை மேற்கொண்டதிலிருந்து ஆறு மாதங்களுக்குப் பிறகு, ருவிங்கிள் சனல் எனும் தொலைக்காட்சியிலிருந்து அவர்களுடைய புதிய தொலைக்காட்சி நாடகத்தில் பிரதான நடிகையாக இருப்பதற்கென கொடைமுனைவொன்றினை அவள் பெற்றாள். அவள் அக் கொடைமுனைவினை ஏற்றுக் கொண்டதுடன் ருவிங்கிள் சனல் இடமிருந்து முற்கொடுப்பனவாக ஒரு மில்லியனை ஏற்றுக் கொண்டாள்.

நிக்கோலினால் உடன்படிக்கை மீறப்பட்டதற்காக ஏதேனும் சட்ட நடவடிக்கை எடுக்க முடியுமா என ஸ்ரார் சனல் உமது ஆலோசனையை நாடுகிறது. அவர்களுக்கு ஆலோசனை வழங்குக.

(50x2= 100 புள்ளிகள்)

4. ராகவன் எனும் மிகவும் பிரபல்யமான வியாபாரியொருவனுக்கு நீலா மற்றும் மாலா ஆகிய இரு மகள்களும் ராஜிவ் எனும் ஓர் மகனும் உள்ளனர். ராகவன் தனது ஆதனங்களைப் பின்வரும் நோக்கங்களுக்காக அவனது நண்பர் ராஜன் என்பவனுக்குக் கைமாற்றினான்:

(அ) அவரது மோட்டார் வாகன வியாபாரத்தினைக் கொண்டு நடாத்துவதற்கும் அந்த வியாபாரத்திலிருந்தான இலாபங்களை ராஜன் விரும்புகின்றவாறாக நீலா அல்லது மாலாவினுடைய உயர் கல்விக்குப் பயன்படுத்துவதற்கு;

(ஆ) சட்டபூர்வமாக அதிகாரமளிக்கப்பட்டிராத அவனது துப்பாக்கி வியாபாரத்திலிருந்தான இலாபங்களிலிருந்து அவனது மகன் ராஜிவினுடைய தேவைகளைக் கவனிப்பதற்கு;

(இ) அவரது தேயிலை பெருந்தோட்டத்திலிருந்து இலாபங்கள் ஈட்டப்படின், அந்த பெருந்தோட்டத்தில் இருந்தான இலாபங்களை அவரது இரு மகள்களுக்குமிடையில் சமமாகப் பிரிப்பதற்கு;

(ஈ) புத்தளத்திலுள்ள அவனது தென்னை பெருந்தோட்டத்தினைப் பராமரிப்பதற்கும் அதன் இலாபங்களை ராகவனுடைய மைத்துனர்களின் பிள்ளைகளுடைய நன்மைக்குப் பயன்படுத்துவதற்கு;

(உ) கண்டியிலுள்ள வர்த்தக கட்டடத் தொகுதியினை விற்று, அந்த விற்பனையிலிருந்து பெறுபவைகளை கடனாளிகளுக்கான கடன்களைச் செலுத்துவதற்கு.

மேலுள்ள வேண்டுதல்களில் வலிதான நம்பிக்கை ஒன்று ஆக்கப்படுகின்றதா என்பதனை நம்பிக்கைக் கட்டளைச் சட்டத்தின் பொருத்தமான ஏற்பாடுகள் மற்றும் தீர்க்கப்பட்ட வழக்குகளை ஆதாரங்காட்டி ஆராய்க.

(20x5= 100 புள்ளிகள்)

5. நிமலன் என்பவனிடம் கடையொன்றும் ஐந்து ஏக்கர் தென்னம் பெருந்தோட்டமொன்றும் இருந்தன. நிமலன் அவனது இளைய சகோதரியான ராணி என்பவளுக்கு அவளது திருமணத்தில் சீதனமாக வழங்குவதற்கென அவளது பெயரில் வீடொன்றினைக் கொள்வனவு செய்தான். நிமலனின் விருப்பத்திற்கு மாறாக ராணி இளைஞன் ஒருவனைத் திருமணம் செய்து கொண்டாள். நிமலன் அவுஸ்திரேலிய பிரஜை ஒருவரான திவ்யா என்பவளைத் திருமணம் செய்தமையால் அவன் அவுஸ்திரேலியாவிற்குப் பயணிக்க வேண்டியிருந்தது.

நிமலனை சில வருடங்களுக்கு அவுஸ்திரேலியாவில் தங்கும்படி திவ்யா வலியுறுத்தியதுடன் அவர்கள் இருவரும் இலங்கைக்கு ஒன்றாகத் திரும்பி இலங்கையில் நிரந்தரமாக வாழலாம் எனவும் ஆலோசனை வழங்கினாள். அவுஸ்திரேலியாவிற்குப் புறப்பட முன்னர், நிமலன் தனது கடையினை அவனது வேலையாட்களில் ஒருவனான குமரன் என்பவனுக்குக் கைமாற்றியதுடன் அவுஸ்திரேலியாவிலிருந்து தான் திரும்பிவரும் வரைக்கும் அவ் வியாபாரத்தினைக் கொண்டு நடாத்துமாறு வேண்டினான். நிமலன் தான் ஒரு சில வருடங்களை அவுஸ்திரேலியாவில் கழிக்கக் கருதுவதாக அவனது நண்பனான சுரேஷ் என்பவனுக்குக் கூறியதுடன் அவனது தென்னம் பெருந்தோட்டத்தினை சுரேஷிற்குக் கைமாற்றினான். அந்த பெருந்தோட்டத்திலிருந்தான வருமானத்தினை நிமலனுடைய பெற்றோரின் வங்கிக் கணக்கில் வைப்பிலிடுமாறு நிமலன் சுரேஷிடம் வேண்டினான். இருப்பினும், சுரேஷ் அவ் வருமானத்தினை தனது சொந்தக் கணக்கில் வங்கியொன்றில் வைப்பிலிட்டான். நிமலன் அவுஸ்திரேலியாவிலிருந்து வாசு என்பவனுக்குப் பணம் அனுப்பியதுடன் பம்பலப்பிட்டியவிலுள்ள தொடர்மாடிக் குடியிருப்பொன்றினை நிமலனுடைய மூத்த சகோதரியான மலர் என்பவளின் பெயரில் கைமாற்றுமாறு கோரினான். அத் தொடர்மாடிக் குடியிருப்பானது கடலுடனான ஓர் அழகிய காட்சியைக் கொண்டிருப்பதனால் அதனை அவன் கொள்வனவு செய்ய விரும்பியதாகவும், அவுஸ்திரேலியாவிலிருந்து அவன் திரும்பிய பின்னர் அத் தொடர்மாடிக் குடியிருப்பில் அவன் வாழவும் இயற்கையை அனுபவிக்கவும் முடியும் என மலரிடம் கூறினான்.

நிமலன் அவுஸ்திரேலியாவிலிருந்து திரும்பிய பின்னர், கடையினைத் திருப்பித் தருமாறு குமரனை வேண்டியதுடன், அந்த பெருந்தோட்டத்திலிருந்தான வருமானத்தினைத் திருப்பித் தருமாறு சுரேஷினை வேண்டினான். அத்துடன் அவன் அந்த வீட்டினைத் திருப்பித் தரும்படி ராணியிடமும் தொடர்மாடிக் குடியிருப்பினைத் திருப்பித் தரும்படி மலரிடமும் வேண்டினான். ஆனால், அவர்கள் அனைவரும் நிமலனின் கோரிக்கையினை ஏற்க மறுத்துவிட்டனர். அந்த ஆதனங்கள் மற்றும் பணம் தொடர்பாக அவனது சார்பில் ஆக்க நம்பிக்கைகள் ஆக்கப்பட்டுள்ளனவா என்பதை நிமலன் அறிய விரும்புகிறான்.

நம்பிக்கைகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் தீர்க்கப்பட்ட வழக்குகளின் பின்னணியில் அவனுக்கு ஆலோசனை வழங்குக.

(100 புள்ளிகள்)

6. (அ) மற்றும் (ஆ) பகுதிகள் இரண்டிற்கும் விடையளிக்க.

(அ) விமல் என்பவன் அவனது மகள்களான குசும், மல்லிகா மற்றும் செனுரி ஆகியோரின் நன்மைக்கென பதுளையிலுள்ள அவனது தேயிலை பெருந்தோட்டம் மற்றும் ஹோட்டல் என்பவற்றுக்கு சில்வா மற்றும் அமல் ஆகியோரைக் கூட்டு நம்பிக்கையாளர்களாக

நியமித்தான். சில்வா மற்றும் அமல் ஆகியோர் குறித்த நம்பிக்கை ஆதனமானது பதிவு செய்யப்படாத ஆவணமொன்றின் மூலம் தமக்குக் கைமாற்றப்பட்டுள்ளது என அறிந்திருந்தனர். ஆனால், அவர்கள் குறித்த ஆவணத்தினை இன்றுவரையில் பதிவு செய்யத் தவறியுள்ளனர். குறித்த நம்பிக்கை ஆவணமானது பெருந்தோட்டத்திலிருந்தும் ஹோட்டல் இலிலிருந்தும் கிடைக்கின்ற இலாபத்தினை குசும், மல்லிகா மற்றும் செனுரி ஆகியோருக்கு மாதாந்தம் அவர்களது செலவுகளுக்கென சமமாகக் கொடுக்கும்படி சில்வா மற்றும் அமலினைத் தேவைப்படுத்துகின்றது. அமல் செனுரியுடன் உறவொன்றைக் கொண்டிருந்ததுடன் இலாபங்களில் 60% இனை செனுரிக்கு வழங்கும்படி சில்வாவிற்கு ஆலோசனை வழங்கினான். சில்வா அமலினால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைக்கு இணங்கியதுடன் இலாபங்களில் 60% இனை அவர்கள் செனுரிக்கு வழங்கினர். குசும், மல்லிகா மற்றும் செனுரி ஆகியோர் ஒப்பந்தம் செய்யத் தகுதியுடையவர்கள். குசும் மற்றும் மல்லிகா ஆகியோர் ஆதனங்களின் செலவுகள் மற்றும் இலாபங்களுடன் தொடர்புடைய கணக்கு விபரங்களைச் சமர்ப்பிக்கும்படி நம்பிக்கையாளர்களை வேண்டினர். கணக்கு விபரங்களைச் சமர்ப்பிக்க வேண்டாம் என செனுரி ஆலோசனை வழங்கினாள் என்பதுடன், நம்பிக்கையாளர்கள் குசும் மற்றும் மல்லிகாவினால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையினை ஏற்க மறுத்தனர். ஆதனங்களினை குசும், மல்லிகா மற்றும் செனுரி ஆகியோரின் பெயரில் கைமாற்றம் செய்யும்படி குசும் மற்றும் மல்லிகா ஆகியோர் நம்பிக்கையாளர்களை வேண்டினர். ஆனால், செனுரி இக் கைமாற்றத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தமையினால் அவர்களது பெயர்களில் ஆதனங்களைக் கைமாற்ற நம்பிக்கையாளர்கள் மறுத்தனர்.

மேற்போந்த நிலைமையிலான பிணக்குகளின் பின்னணியில் திறத்தவர்களது உரிமைகள், கடமைகள் மற்றும் பொறுப்புடைமைகளை ஆராய்க. நம்பிக்கைக் கட்டளைச் சட்டத்தின் பொருத்தமான ஏற்பாடுகளை ஆதாரங்காட்டுவதன் மூலம் உமது விடையினை ஆதாரப்படுத்துக.

(ஆ) ஹரி என்பவன் தனது பிள்ளைகளான மினோ மற்றும் ஜீவா ஆகியோரின் நன்மைக்கென ஆக்கப்பட்ட நம்பிக்கையொன்றுக்கு ரவி மற்றும் டேவிட் ஆகியோரை நம்பிக்கையாளர்களாக நியமித்தான். நம்பிக்கை ஆதனமானது அவனது இறப்பர் பெருந்தோட்டமாகும். குறித்த நம்பிக்கை ஆவணமானது நம்பிக்கையாளர்கள் அவ் ஆதனத்தினை ஆறு மாதங்களுக்குள் விற்பனை செய்ய வேண்டுமெனவும் அதிலிருந்து பெறுபவைகளை பயனாளிகளின் நன்மைக்கென பங்குச் சந்தையில் முதலீடு செய்தல் வேண்டுமெனவும் தேவைப்படுத்தியது. இருப்பினும், கோவிட்-19 பெருந்தொற்றின் காரணமாக இவ் விற்பனையினைக் குறித்த காலப்பகுதியினுள் நிறைவேற்ற முடியவில்லை. இப் பெருந்தொற்றின் காரணமாக நம்பிக்கை ஆதனத்தின் பெறுமதி

வீழ்ச்சியடைந்தது. குறித்த ஆதனமானது ஒரு வருடத்தின் பின்னர் குறைந்த பெறுமதியொன்றுக்கு விற்கப்பட்டது. குறித்த ஆதனத்தினை ஏல விற்பனை ஒன்றில் விற்கும்படி நம்பிக்கையாளர்கள் வேண்டப்பட்டனர். ஆனால், அவர்கள் அவ் ஆதனத்தினை ஓர் தனியார் விற்பனையில் அவர்களது நெருங்கிய நண்பனான அஜித் என்பவனுக்கு விற்பனை செய்தனர். விற்பனையிலிருந்து கிடைக்கப்பெற்றவைகள் பங்குச் சந்தையில் முதலீடு செய்யப்படவில்லை. விற்பனையிலிருந்தான மொத்தப் பணத்தையும் ரவி தனது சொந்த வியாபாரத்தில் பயன்படுத்தினான்.

மேற்போந்த நிலைமையிலான பிணக்குகளின் பின்னணியில் திறத்தவர்களது உரிமைகள், கடமைகள் மற்றும் பொறுப்புடைமைகள் தொடர்பில் ஆராய்க. நம்பிக்கைக் கட்டளைச் சட்டத்தின் பொருத்தமான ஏற்பாடுகளை ஆதாரங்காட்டுவதன் மூலம் உமது விடையினை ஆதாரப்படுத்துக.

(50x2 = 100 புள்ளிகள்)

********************